# தமிழ் நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண். 100, அண்ணா சாலை, கிண்டி, சென்னை- 600 032.
தொலைபேசி : 044- 22201337
மின்னஞ்சல் முகவரி : ombudsmanlocal@tn.gov.in

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர், சென்னை- 600 032.
முன்னிலை : முனைவர் சோ. அய்யர், இ.ஆ.ப., (ஓ)

*******

முறையீட்டு மனு எண். 164/மா/2017

ஆணை எண். 75/2018

நாள் : 28/03/2018

**திருமதி A.P. கிறிஸ்டல்,**
**மணலி புதுநகர்,**
**சென்னை – 103.** – முறையீட்டு மனுதாரர்

**செயற்பொறியாளர்,**
**மண்டலம் – 2,**
**மணலி. சென்னை – 600 068.** – எதிர் மனுதாரர்

சென்னை மாநகராட்சி, மணலி புது நகர், எண். 60/40, 39–வது தெரு முகவரியில் வசிக்கும் திருமதி A. P. கிறிஸ்டல் அவர்களின் 01.08.2017 நாளிட்ட முறையீட்டு மனு, இம்முறைமன்ற நடுவத்தில் 07.08.2017 அன்று பெறப்பட்டு, 164/2017 எண்ணிட்ட முறையீட்டு மனுவாகப் பதிவு செய்யப்பட்டது. முறையீட்டு மனுதாரரின் மனு மற்றும் ஆவணங்கள், விசாரணையின்போது முறையீட்டு மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரர் மற்றும் 2–வது மண்டல உதவி வருவாய் அலுவலர் ஆகியோரிடம் பெறப்பட்ட வாக்குமூலங்கள் பரிசீலிக்கப்பட்டு கீழ்காணும் ஆணை வெளியிடப்படுகிறது :-

## <u>ஆணை</u>

சென்னை மாநகராட்சி, மணலி புது நகர், எண். 60/40, 39–வது தெரு முகவரியில் வசிக்கும் திருமதி A. P. கிறிஸ்டல் என்பவர், மணலி 2–வது மண்டலத்தில் பணிபுரியும் செயற்பொறியாளர் திரு S. தேவேந்திரன் அவர்கள் மீது கீழ்க்காணும் குற்றச்சாட்டுகளைத் தெரிவித்து உரிய நடவடிக்கை எடுக்கக்கோரி இம்முறைமன்ற நடுவத்தில் முறையீடு செய்துள்ளார் :-

(1) எந்தவித ஆதாரங்களும் இல்லாமல் சாலை போட்டது ;

(2) 1449 சதுர அடி மனைக்கு தன்பெயரில் வரி தாக்கல் செய்ய மறுத்தது ;

(3) மணலி புது நகரில் சமூக கூட்டமர்வு அமைக்க வேண்டிய இடத்தில் வணிக

வளாகம் கட்ட அனுமதி வழங்கியது ;

(4) கையூட்டு பெற்றுக்கொண்டு பணி நியமனம் வழங்கியது ;

(5) சட்டவிரோதமாக தனது மனைவி பெயரில் சொத்துக்களை வாங்கியது ;

(6) பட்டா நிலத்தில் ஓடை அமைக்க டெண்டர் விட்டது ;

(7) பல கோடிக்கு ஊழல் செய்தது மற்றும் மணலி மண்டலத்திலேயே தொடர்ந்து பணியாற்றுவது.

2. மேற்குறிப்பிட்ட குற்றச்சாட்டுகள் குறித்து, 2–வது மண்டல அலுவலர் விரிவான அறிக்கையினை சமர்ப்பித்துள்ளார். மனுதாரரின் குற்றச்சாட்டுகள் அனைத்தும் உண்மைக்கு மாறானது எனவும் அரசு அலுவலர்களை பணி செய்யவிடாமல் மன உளைச்சலுக்கு ஆளாக்கும் விதமாகவே உள்ளது எனத் தெரிவித்து அக்குற்றச்சாட்டுகளை தள்ளுபடி செய்யக் கோரியுள்ளார்.

3. முறையீட்டு மனுதாரரிடம் 01.11.2017, 18.12.2017 மற்றும் 05.01.2018 ஆகிய நாட்களில் விசாரணை மேற்கொள்ளப்பட்டு வாக்குமூலங்கள் பதிவு செய்யப்பட்டன. விசாரணையின்போது நில எடுப்பு மேற்கொள்ளாமல் 150 அடி அகல சாலை அமைத்தது மற்றும் பட்டா நிலத்தில் ஓடை அமைக்கப்பட்டது குறித்தும் விசாரணையின்போது குறிப்பிட்டார். ஆனால், சாலை மற்றும் ஓடை அமைக்கப்பட்ட இடம் யாருடைய பட்டா நிலம் என்பதற்கான ஆவணங்கள் சமர்ப்பிக்கவில்லை. மேலும், சம்பந்தப்பட்ட பட்டாதாரர்களிடமிருந்து தங்கள் நிலத்தில் சாலை மற்றும் ஓடை அமைத்தது குறித்து எந்தவித புகார்களும் வரப்பெறவில்லை. இடையன் சாவடி கிராம சர்வே எண்.356/1–இல் பெட்ரோல் பங்க் வைக்க அனுமதி அளித்தது, வணிக வளாகம் கட்ட திரு தயாளன் என்பவருக்கு அனுமதி வழங்கியது குறித்தும் விசாரணையின்போது குறிப்பிட்டார். நில உடமைதாரர்கள் உரிய ஆவணங்களை சமர்ப்பிக்கும் நிலையில் கட்டடம் மற்றும் இதர வர்த்தகம் சம்பந்தப்பட்ட தொழில்களுக்கான உரிமங்கள் வழங்குவதை மாநகராட்சியால் மறுக்க இயலாது.

4. முறையீட்டு மனுதாரர் இடையன் சாவடி கிராமத்தில் தனக்குப் பாத்தியப்பட்ட மனைக்கு காலிமனை வரிவிதிப்பு செய்ய மறுத்ததே செயற்பொறியாளர் திரு S.தேவேந்திரன் மீதான முதன்மையான குற்றச்சாட்டு. மண்டலத்தில் பணிபுரியும் செயற்பொறியாளருக்கு வரிவிதிப்பு செய்யும் அதிகாரம் இல்லை என்றும் நிலம் சம்பந்தப்பட்ட ஆவணங்கள் ஐயத்திற்கிடமில்லாமல் இருக்கும் நிலையில் உதவி வருவாய் அலுவலர் வரி விதிப்பு செய்வார் என மண்டல அலுவலர் தனது அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

5. மண்டல செயற்பொறியாளர் திரு S. தேவேந்திரன் அவர்களிடமும் 18.12.2017 மற்றும் 05.01.2018 ஆகிய நாட்களில் விசாரணை மேற்கொள்ளப்பட்டு வாக்குமூலங்கள் பதிவு செய்யப்பட்டன. குற்றச்சாட்டுகளுக்கு விரிவான விளக்கமும் அளித்துள்ளார். மனுதாரர் வரிவிதிப்பு கோரிய நிலம் புல எண்.317–க்கு உட்பட்டதென்றும், சென்னை பெருநகர வளர்ச்சிக் குழுமம் சார்பாக மனுதாரருக்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட ஆவணங்களை சமர்ப்பிக்கும் நிலையில் வரிவிதிப்பு செய்யப்படும் எனவும் தெரிவித்தார்.

6. முறையீட்டு மனுதாரர் பிறரது பட்டா நிலங்களில் ஓடை மற்றும் சாலை அமைத்தது பற்றியும், பிற மனை உரிமையாளர்களின் இடத்தில் வணிக வளாகம் மற்றும் பெட்ரோல் பங்க் அமைக்க அனுமதி வழங்கியது குறித்தே தனது விசாரணையின்போது தெரிவித்தார். ஆனால், எந்தவொரு பட்டாதாரரும் மாநகராட்சியின் நடவடிக்கை குறித்து இம்முறைமன்ற நடுவத்தில் புகார் தெரிவிக்கவில்லை. 05.01.2018 அன்று நடைபெற்ற விசாரணையின்போது, தனது நிலம் சம்பந்தப்பட்ட ஆவணங்களை பத்து தினங்களுக்குள் இம்முறைமன்ற நடுவத்தில் சமர்ப்பிப்பதாக உறுதி அளித்தார். தொன்னூறு நாட்கள் முடிவடையும் நிலையில் கூட மனுதாரர் எந்தவொரு ஆவணத்தையும் இம்முறைமன்ற நடுவத்தில் சமர்ப்பிக்கவில்லை. எனவே, மனுதாரரின் குற்றச்சாட்டுகளுக்கு போதிய ஆதாரங்கள் மற்றும் சாட்சிகள் இல்லாத நிலையில், முறையீட்டு மனுவின் மீதான நடவடிக்கையை இத்துடன் முடித்துக்கொள்ள முடிவு செய்து அவ்வாறே இம்முறைமன்ற நடுவம் ஆணையிடுகிறது.

2018– ஆம் ஆண்டு, மார்ச் திங்கள், 28–ஆம் நாளன்று, என்னால் கையொப்பமிடப்பட்டு, அலுவலக முத்திரையுடன் இவ்வாணையிடப்படுகிறது.

--//ஒப்பம்//--
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

/ஆணைப்படி அனுப்பப்படுகிறது/

செயலாளர்.

பெறுநர்

1. திருமதி A.P. கிறிஸ்டல்,
60 /40, 39–வது தெரு,
மணலி புது நகர், சென்னை – 600 103.

2. திரு S, தேவேந்திரன்,
செயற்பொறியாளர்,
மண்டலம் – 2,
மணலி, சென்னை மாநகராட்சி,
சென்னை – 600 068.

3. மண்டல அலுவலர்,
மண்டலம் – 2,
மணலி, சென்னை மாநகராட்சி,
சென்னை – 600 068.

நகல் : முறைமன்ற நடுவரின் நேர்முக எழுத்தர்,
பிரிவு அலுவலர்(நிர்வாகம்)
பேரூராட்சி பிரிவு –3,
இ.கோ. / உதிரிகள்